6th August 1963]

எனக்குத் தெரிந்தவரை எந்த நகராட்சியும் கல்லூரி நடத்த முன் வந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு நகராட்சிகளை அனுமதிக்க வேண்டுமென்றால், அது நிதி நிலைமை ஆகியவற்றைப் பார்த்து முடிவு செய்ய வேண்டிய விஷயமாகும்.

திரு. ஆ. தியாகராாசன் : புதுக்கோட்டையில் நகராட்சியால் நடத்தப்பட்டு வரும் ஹைஸ்கூல்களை . . .

கனம் சபாநாயகர் : மூலக் கேள்வி சேலம் மாவட்டத்தைப் பற்றியது. ஒவ்வொரு மாவட்டத்தைப் பொறுத்தும் உப கேள்வி கேட்பது 'ரெலவன்ட்' ஆகாது.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார் : இவ்வளவு பெரிய சொத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்போது நகராட்சிக்குச் சர்க்கார் நஷ்ட ஈடு கொடுப்பது நியாயம் அல்லவா? அவ்வாறு காம்பன்சேஷன் கொடுப்பது நியாயம் என்று அரசாங்கத்துக்குத் தோன்றினால் காம்பன்சேஷன் கொடுக்க முன் வருவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் சொத்தை யார் எடுத்துக் கொண்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை. மாணவர்கள், மாணவிகள் படிப்பதற்காகக் கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரி இப்போது நடக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத்தின்கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளைக் கல்லூரிகளாக மாற்றும்போது அதில் இருக்கும் ஊழியர்களைச் சர்க்கார் ஊழியர்களாக எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் உயர்தர ஆரம்பப் பள்ளிகளை உயர்தரப் பள்ளிகளாக மாற்றும்போது அங்கிருக்கும் செகண்டரிகிரேடு ஆசிரியர்களை எடுத்துக் கொள்வதில்லை. இதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

சாலைகள்

***9 கேள்வி—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு கொளவா ஏரிக்கு அருகாமையில் அம்மணம்பாக்கம், பட்டரவாக்கம், தேனூர் போன்ற ஊர்களுக்குச் செல்லுவதற்காக அமைக்கப்பட்ட பாதை மூடப்பட்டது அரசாங்கம் அறியுமா?

(இ) அப்படியானால், அதற்குக் காரணமென்ன?

(உ) அந்தப் பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) & (*c*) Do not arise.

திரு. செ. கோ. விசுவநாதன்: ஸார், காவலர்கள் இல்லாத ரயில்வே கேட்டுகளில் காவலர்களைப் போடுவதற்கான செலவை மாநில அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று பத்திரிகை களில் செய்தி வந்திருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப் பற்றி மத்திய அர சாங்கத்தோடு விவாதித்து முடிவு ஏற்பட்டிருக்கிறது. முடிவின் விவரத்தைத் தனிக் கேள்வி கேட்டால் அளிக்கலாம்.

Oil refinery

* 10 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the present stage of the proposal to locate an oil refinery in the State during the Third Five-Year Plan period; and

(*b*) whether this proposal is dependant on the results of the investigations for oil deposits in the State?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The Government of India have since decided to establish fourth oil refinery at a suitable site in Cochin area of Kerala State.

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், நான் கேட்ட கேள்வி, நம்முடைய ராஜ்யத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் வைப் பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கின்றன என்பதாகும். தற்போது நம்முடைய ராஜ்யத்தில் அந்த நிலையம் அமைக்கப்படவில்லையானாலும் மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டகாலத்திலாவது ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மூன்றாவது திட்ட காலத்தில் என்று சொல்வதற்கில்லை. ஆனால், நம்முடைய ராஜ் யத்தில், இப்போது நிறுவப்படும் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அடுத்தபடியாக அமைக்கக்கூடிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளைச் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், இப்போது காவேரி வட்டா ரத்தில் எண்ணெய் கிடைக்குமென்ற அபிப்பிராயம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்தச் சமயத்திலாவது இந்த 'ரிபைனரி' நம்முடைய ராஜ்யத்தில் அமைக்கப்படும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது 'ஹைபதடிகல் குவெஸ்டியன்'.

திரு. இராம. அரங்கண்ணல்: ஐந்தாவது சுத்திகரிப்பு நிலை யத்தைத் தமிழ் நாட்டில் நிறுவுவதற்கு மத்திய அரசு முன் வரும் என்று மத்திய அமைச்சர் திரு அளகேசன் அவர்கள் கூறியிருக் கிறார்கள். அதன்படி தஞ்சை மாவட்டத்தில் அந்த நிலையத்தை ஏற்படுத்த முன் வருவார்களா?